# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 48வது கூட்டறிக்கை 2022.02.08

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 48வது அமர்வு 2022.02.08 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 18. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 48வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல், கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள் சுகயீனம் காரணமாக சபை அமர்வுக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார்கள். உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலின் படி சுகாதார காரணங்களுக்காக கௌரவ உறுப்பினர்கள் சபை அமர்வுக்கு சமூகமளிக்க முடியாவிட்டால் அவர்களின் விடுமுறை விண்ணப்பங்கள், மருத்துவச் சான்றிதழ் தரும் பட்சத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கமைய இந்த இரண்டு வேண்டுகோள்களை அங்கீகரிப்பதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, கௌரவ பெண் உறுப்பினர் திருமதி எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள் பெப்ரல் அமைப்பின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற அறிவித்தல் நமக்கு பெப்ரல் அமைப்பினால் அனுப்பப்பட்டிருக்கின்றது. இது நமது சபைக்கு ஒரு கௌரவம். இப்படியான முயற்சிகளில் பெண் உறுப்பினர்கள் மட்டுமல்ல ஆண்களும் ஈடுபட்டு இந்த பொறுப்புகளை பாரம் எடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டு, கௌரவ உறுப்பினர் திருமதி எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்களை உங்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.

நமது முன்னாள் உறுப்பினர் முஹம்மட் றனூஸ் என்பவர் அதிமேதகு ஜனாதிபதியின் செயலாளருக்கு இந்த சபையின் நடவடிக்கைகளைப் பற்றி ஒரு முறைப்பாடு செய்திருக்கின்றார். S29 Irrigation Channel இல் உள்ள மரங்களை வெட்டி அகற்றியதும், அதற்கு பாதிப்பு ஏற்படுத்தியதும் என்ற தலைப்பில் முறைப்பாடு செய்திருக்கின்றார். இதற்குரிய விளக்கங்கள் சம்மாந்துறை பொலீஸ் இலும் ஏனைய உரிய இடங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது உங்களின் அறிவித்தலுக்காக நான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

சென்ற மாவட்ட குழுக் கூட்டத்தில் இந்த மாவட்டத்தில் காடாக்கப்பட்ட காணிகள் மீண்டும் விவசாயத்திற்கு விடுபட வேண்டும் என்ற கோரிக்கையை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முஸர்ரப் அவர்கள் முன்வைத்த போது ஒரு வாக்குவாதம் நடந்தது.

அதில் உங்கள் சார்பில் நான் எழுந்து இந்த உலகத்தில் பல நாடுகளில், காணிப் பிரச்சினை காரணமாகவே இன முறுகல்கள், யுத்தங்கள் நடந்திருக்கின்றன. அம்பாறை மாவட்டத்திற்கு ஒரு சரித்திரம் இருக்கின்றது. நமது மூதாதையர்கள் இந்தப் பகுதிக்கு வரும் போது இப் பகுதி எல்லாம் ஒரு வனமாகவே காணப்பட்டது. இக்னியாகலயில் இருந்து கடல்வரை காடுகளை வெட்டி சேனை செய்து, சேனநாயக்க சமுத்திரம் கட்டப்பட்ட பின் இரண்டு போகங்களும் வேளாண்மை செய்துதான் இன்று இந்த நாட்டின் ஏறத்தாள 30, 40 வீதமான நெல் உற்பத்தியை இந்த மாவட்டம் வழங்குகின்றது.

2வது உலகமகா யுத்தத்திற்கு பின் கல்முனையில் ஒரு விசேட கச்சேரி உருவாக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு உணவு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது ஒரு சரித்திரம். இச் செயல்களினால்தான் நமது நாடு நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்டது.

இப்போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்கும் வேண்டுகோள் காடுகளை அழிப்பதற்காக அல்ல. யுத்தத்தினால் காடாக்கப்பட்ட காணிகளை மீள்வதற்கு ஆகும்.

இந்த மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகள் மூன்றுக்கும் இருப்பது இந்த மாவட்டத்தின் 30 வீதமான காணிகள் மட்டுமே. எஞ்சிய 70 வீதமான காணிகளும் பெரும்பான்மை நிருவாக அலகுகளுக்குள் வருகின்றது என்று சுட்டிக்காட்டினேன்.

மீண்டும் பெப்ரவரி 15 ஆந் திகதி கூடி ஆராய வேண்டும் என்ற முடிவோடு அந்த வாக்குவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

அதை அவ்விடத்தில் விடாமல் நான் 2019 ஆம் ஆண்டு அம்பாரை அரசாங்க அதிபரினால் வெளியிடப்பட்ட தகவல் கொண்ட புத்தகத்தை வைத்து காணிப் பாவனையைப் பற்றி ஒரு கணிப்பை செய்த போது அம்பாரை மாவட்டத்தில் உள்ள சனத்தொகையில் 63 வீதமானவர்கள் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளில் வாழ்கின்றனர். அம்பாரை தொகுதியில் 37 வீதமான சனத்தொகை வாழ்கின்றது. அதே போல் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளில் இந்த மாவட்டத்தில் உள்ள காணிகளில் 41 வீதமான காணிகள் தான் அந்த தொகுதிகளில் இருக்கின்றது.

எஞ்சிய 59% உம் அம்பாரை தொகுதியில் உள்ளது. விவசாயக் காணிகளில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளில் மாவட்டத்தின் 39 வீதமான காணிகள்தான் இருக்கின்றது. எஞ்சிய காணிகள் அம்பாரை தொகுதியில் இருக்கின்றது. அப்படியானால் சனத்தொகைக்கு ஒப்பாக காணிகளை பிரிப்போமானால் சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் தொகுதிகளில் ஒவ்வொரு தலைக்கும் 0.36 ஹெக்டயார் காணிதான் இருக்கின்றது. அம்பாரை தொகுதியில் உள்ளவர்களுக்கு 0.95 வீதமான ஹெக்டயார் காணி இருக்கின்றது. அதே போல் விவசாயக் காணிகளை பார்ப்போமானால் கரையோரத் தொகுதிகளில் 0.15 ஹெக்டயார். அம்பாரையில் 0.42 ஹெக்டயார்.

நிர்வாக ரீதியில் பார்த்தால் சிங்கள மொழியில் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களில் 78 வீதமான காணிகளும், தமிழ் மொழியில் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களில் எஞ்சிய 22 வீதம் காணப்படுகின்றது. இதன்படி சிங்கள மொழியில் பேசும் பகுதிகளில் தலைக்கு 0.42 ஹெக்டயார் உம், தமிழ் பிரதேசங்களில் தலைக்கு 0.2 ஹெக்டயாருமே உள்ளது.

இந்த நிலையில் தொடர்ந்தும் கரையோர நிர்வாகப் பகுதிகளில் இருக்கும் காணிகளில் ஆக்கிரமிக்கும் வேலைகள் தொடரக்கூடாது என்ற வாதத்தை எடுக்க வேண்டியதாக இருக்கின்றது. நமக்கு இருப்பதோ 22%. அதுவும் இப்பொழுது நமது மக்கள் கேட்பது யுத்த காலத்தில் காடாக்கப்பட்ட காணியை மீட்டுத்தாருங்கள் என்று, அதை அவர்கள் திருட்டு உறுதி, திருட்டு போமிட் போர்வையில் தட்டிக்கழித்து வருகின்றார்கள். இந்த சபை இந்த ஆவணத்தை வைத்து தமிழ் நிர்வாக பிரதேசங்களில் உள்ள யுத்த காலத்தில் காடாக்கப்பட்ட காணிகளை உரிய விவசாயிகளுக்கு கையளிக்க வேண்டும் என்ற பிரேரணையை எடுத்து அரசாங்க அதிபருக்கும், கௌரவ ஆளுநருக்கும் சமர்ப்பிப்பதற்கு உங்களின் அனுமதியை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/48/01**

அம்பாரை மாவட்டத்தில் தமிழ் மொழியினால் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களில் யுத்த காலத்தில் காடாக்கப்பட்ட காணிகளை உரிய விவசாயிகளுக்கு கையளிக்க வேண்டும் என்று அரசாங்க அதிபருக்கும், கௌரவ ஆளுநருக்கும் விடயங்களை விளக்கி கடிதம் சமர்ப்பிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/48/02**

சென்ற மாதம் 2022.01.01 தொடக்கம் 2022.01.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்ததாக சபை அமர்வுகளுக்கான திகதிகள் தரப்பட்டிருக்கின்றது. அதை உங்களின் கவனத்திற்கு கூறுகின்றேன்.

## தீர்மானம் - 04/48/03

புதிதாக ஆதனவரி அறவீடு செய்ய மதிப்பீடு செய்யப்பட்டு, K படிவம் வழங்கப்படும் பிரதேசங்களுக்கு படிவம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்கு ஆண்டுக்கான முழு ஆதன வரியினையும் செலுத்துவோருக்கு ஊக்குவிப்பாக 10% கழிவு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொருளாதார ரீதியில் பின் தங்கிய மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடியிருப்பாளர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் சட்டத்தின் 135 (இ), 158.2 பிரிவுகளுக்கமைய வரி விலக்கு மற்றும் சலுகை வழங்கல். இதை சரியான முறையில் உறுப்பினர் உறுதிப்படுத்தி கிராம சேவகர், பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தி எந்தவொரு வசதியும் இல்லாதவர்களுக்கு விலக்களிப்பு செய்வது. அதில் கவனமாக இருக்க வேண்டும் சபையின் வருமானம் பாதிக்கக்கூடாது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முற்றாக வரியை நீக்கினால் நாம் பாரிய சவாலுக்குள்ளாகுவோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சலுகை வழங்குவதற்கு நமக்கு இடம் இருக்கின்றது. அதை சரியாக பாவிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மானிய அடிப்படையில் ஏதோ ஒரு கட்டணம் அறவிட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் சிபார்சு செய்கின்ற நேரம் அதை செய்யலாம்.

## தீர்மானம் - 04/48/04

பொருளாதார ரீதியில் பின் தங்கிய, மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடியிருப்பாளர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 135(இ), 158.2 பிரிவுகளுக்கமைய வரிவிலக்கு மற்றும் சலுகை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இம் முறை சில இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுக்கப்படவில்லை. அதே நேரம் இதற்கு சிலர் மாத அடிப்படையில் விண்ணப்பங்கள் தந்திருக்கின்றார்கள். சட்டரீதியாக நாம் 14 நாட்களுக்கு கொடுக்கலாம். குத்தகைக்கு எடுத்தவர்களின் வாதம் 06 மாதம் முற்பணத்தை செலுத்தி மாதாந்தம் செய்து வருகின்றோம். அவர்கள் முதலீடு இல்லாமல் செய்வது நியாயம் இல்லை என்று, 14 நாள்

அடிப்படையில் கொடுப்பது என்றால் சென்ற வருடம் என்ன விலைக்கு போனதோ அதை பிரித்து நாளாந்த கணக்குப்படி கொடுப்போம். ஆனால் அவர்களுக்கு முற்பணம் இல்லை. அடுத்த 14 நாளைக்கு இடையில் இன்னொருவர் வந்து அதை விட கூடுதலாக விண்ணப்பம் தந்தால் நாம் அதைத்தான் எடுக்க வேண்டும். இதை எப்படி நியாயமாக செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 14 நாட்களுக்கு கொடுப்பவர்களுக்கு மாத வாடகையை கூட்டியும், மற்றவர்களுக்கு குறைத்தும் எடுக்க இயலாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உதாரணமாக கைகாட்டிச் சந்தியின் சென்ற முறை வாடகை ஒரு நாளைக்கு 7500.00 ஆனால் அதற்கு இன்னொருவர் 8000.00 படி தருகின்றேன் என்றால் அவருக்கு கொடுப்போம். குத்தகைக்கு எடுத்தவர்களின் வாதம் நாங்கள் 06 மாதத்திற்குரிய பணத்தை செலுத்திவிட்டு கடை நடாத்துகின்றோம். அவர்கள் முதல் இல்லாமல் வியாபாரம் செய்ய கொடுக்கின்றீர்கள் அது நியாயம் இல்லை என்று, நமக்கு 14 நாள் கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கின்றது. இப்படி செய்வதா? அல்லது 03 மாதம் முற்பணத்தை எடுத்து மாதாந்தம் செய்யவிடுவதா? 06 மாதம் முற்பணத்தை செலுத்தியவர்களுக்கும் 03 மாத தொகையை வாடகைக்கு எடுத்துவிட்டு அவர்களுக்கும் அந்த சலுகையை கொடுத்து செய்வது என்றால் சபை தீர்மானிக்க வேண்டும். இதற்கு ஒத்துவராவிட்டால் என்ன செய்வது? உள்ளுராட்சி உதவி ஆணையாளர் சொல்கின்றார் நீங்கள் 14 நாட்களுக்கு கொடுக்கலாம் என்று,

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த நிபந்தனைக்குள் வராவிட்டால் சட்டத்திற்கு அமைவாக 14 நாட்களுக்கு கொடுத்தால் பிரச்சினை இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதை உண்மையாக உற்று நோக்கினால் குத்தகைக்கு கடை எடுத்தவர்கள் இதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை. ஒரு மனிதாபிமான ரீதியில்தான் இவர்களை சேர்த்துக் கொண்டு செல்வது. நமக்கு சட்டம் திணிக்கின்ற அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை. நாம் ஒரு மனிதாபிமான அடிப்படையில்தான் சபைக்கு வருமானம் வர வேண்டும் என்பதற்காகவும் சட்டத்தை மீற கூடாது என்பதற்காகவும் 03 மாத அடிப்படையில் கொடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் 03 மாதம் கொடுப்போம் என்ற ஒரு கருத்தை கூறினீர்கள். அப்படி கொடுக்க இயலாவிட்டால் என்ன செய்வது என்று கேட்டீர்கள். அப்படியானால் 06 மாதம் எடுத்தவர்களுக்கு கழிவு கொடுக்க இயலாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கழிவு கொடுக்க இயலாது. சலுகை வழங்கலாம்.

**தீர்மானம் - 04/48/05**
2022 ஆம் ஆண்டு குத்தகைக்கு பெறப்படாத இறைச்சிக் கடைகளுக்கு 03 மாத முற்பணத்தை செலுத்தி நடாத்துவதற்கும், இம் முடிவு செயற்படுத்தப்படில் ஏலவே வருடாந்த குத்தகைக்கு பெறப்பட்ட இறைச்சிக் கடைகளுக்கு அவர்களால் செலுத்தப்பட்ட 06 மாத முற்பணத்தின் 03 மாத தொகையினை முற்பணமாகவும், மீதி 03 மாத தொகையினை குத்தகைக்கும் எடுப்பதற்கான பிரேரணை.

இது தவறும் பட்சத்தில் 14 நாட்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பிரேரணை

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமுகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையின் பொறுப்பிலுள்ள இந்தப் பட்டியலில் உள்ள பாதைகளை உத்தியோகபூர்வமாக அவர்களின் பராமரிப்பிற்கு சபை அளிக்கும் பட்சத்தில் அந்தப் பராமரிப்புப் பொறுப்பை அவர்கள் ஏற்பார்கள். இதில் நமக்கு பராமரிப்பு செய்வதற்குரிய வருமானம் இல்லை. அது பாரிய சவால். RDD இல் அவர்களுக்கு பராமரிப்பிற்கு என்றே ஒரு ஒதுக்கீடு இருக்கின்றது. இதில் வேறு பாதைகளையும் சேர்க்கலாம். இதை எந்த அடிப்படையில் வழங்குவது என்பதில் உங்களின் கருத்தை கேட்க விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவென்றால் குறிப்பாக நாம் கருத வேண்டியது காபட் பாதைகள். காபட் பாதைகளை சீர் திருத்தம் செய்யக்கூடிய வசதி நம்மிடம் இல்லை. ஆகவே அதை RDA, RDD இற்கு அப் பாதைகளை இனங்கண்டு கொடுக்க வேண்டும். ஏற்கனவே இந்த சபைக்கு பௌஸ் மாவத்தை வீதியினை RDA இற்கு கையளிக்க வேண்டும் என்ற ஒரு பிரேரணையை சமர்ப்பித்திருந்தேன். இப்படி நீளமான பாதைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும், ஏனைய உள்ளக வீதிகளை RDD இற்கும் கொடுக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போன்று பௌஸ் மாவத்தை வீதியை RDA இற்குதான் கையளிக்க வேண்டும். ஆகக் கூடுதலான வாகனங்கள் பயணிக்கக்கூடிய பாதையாக இருக்கின்றது. ஏற்கனவே அமீர்அலி வீதியும் RDD இல் இருந்தது. 1ம் குறுக்குத் தெருவும் RDD இல் இருந்தது. காபட் இடாவிட்டால் அதன் நிலமை என்ன என்று தெரியும். அதில் பல விசாரணைகள் இடம்பெற்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கல்லு போட்டு தார் ஊற்றி செய்கின்ற பாதை நாளைக்கும் பாவிக்கலாம். ஆனால் கொங்கிறீட் இட்டு 14 நாளாவது சரியான முறையில் பதப்படுத்தப்படாவிட்டால் நிச்சயமாக அந்தப் பாதை எந்தளவு செய்தாலும் உடனடியாக அழிவடையும். கொங்கிறீட்டுக்கு மேல் தார் ஊற்றியது சில காலம் பாவிக்கும். ஆனால் உடனே தார் ஊற்ற இயலாது. RDA இற்கு கொடுத்தால்தான் அஸ்போல்ட் அடிக்கின்ற சந்தர்ப்பம் கூடுதலாக இருக்கின்றது. தயவு செய்து 02 நாளைக்குள் கௌரவ உறுப்பினர்களான றியாஸ், அஸ்பர், நளீம், இன்பவதி என்பவர்கள் கொண்ட குழு அந்த விபரத்தினை செயலாளரிடம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மஜீட்புர சந்தியில் இருந்து கைகாட்டி சந்தி வரைக்கும் வருகின்ற 2 பக்கத்தின் பண்டு வீதியினையும் RDA இற்குதான் கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கான பெயர்களை பெயர்மாற்றம் செய்ததற்கு பின் அனுப்புவதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இல்லை. மாற்றங்கள் இருக்கின்ற இடத்தில் அதையும் சேர்த்து அனுப்புவோம்.

**தீர்மானம் - 04/48/06**

சபைக்குட்பட்ட பாதைகளில் கணரக வாகனங்கள் செல்லுகின்ற நீளமான பாதைகளை RDA இற்கும், ஏனைய உள்ளக வீதிகளை RDD இற்கும் பாரம் கொடுப்பதற்கான பிரேரணை. இதற்காக கௌரவ உறுப்பினர்கள் ஏ.எம்.எம்.றியாஸ், யூ.எல்.அஸ்பர், எஸ்.நளீம், கே.எம்.இன்பவதி ஆகியோர் குழுவாகச் செயற்பட்டு 02 நாட்களுக்குள் உரிய பட்டியலினை ஒப்படைப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/48/07**

பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2022 இற்கமைய நாளாந்தம் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு சேவைக்கு சமூகமளிக்கும் நாட்கள் வேலைக்கு சமூகமளித்திருந்தால் 5000.00 ரூபா முழுக் கொடுப்பனவும் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வேலைக்கு சமூகமளிக்கும் நாட்களாக சனி உட்பட மாதாந்தம் வரும் வேலை நாட்கள் 20 நாட்களாக கொண்டு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/48/08**

சுவானியார் ஆரப்பத்தை வடிகான் கட்டுமானம் ரூபா 26,000.00 மதிப்பீட்டிற்கமைய மேற்கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நேற்று Eastern Small Industry இல் இருந்து ஒரு சகோதரர் சீமெந்து வியாபாரத்தைப் பற்றி ஒரு கடிதத்தை எடுத்து வந்து என்னை சந்தித்தார். இந்த நாட்டில் இன்றைக்கு மின்சாரம், எரிபொருள், நீர் இது மூன்றுக்கும்தான் கட்டுப்பாட்டு விலை இருக்கின்றதே தவிர வேறு ஒன்றுக்கும் கட்டுப்பாட்டு விலை இல்லை. அத்துடன் விலை நிர்ணயம் சபையின் பொறுப்பும் அல்ல. அப்படி இருந்தும் நாங்கள் வியாபாரிகள் எல்லோரையும் எடுத்து அவர்களிடம் கதைத்து மனச்சாட்சிப்படி வியாபாரத்தை செய்யுங்கள் என்று சொல்லியும் இது ஒரு இறக்குமதி பொருளாக இருப்பதனால் கப்பல் வந்தவுடனே Market இற்கு உடனே சீமெந்து வரும். அது முடிந்தவுடன் பிரச்சினை. இதற்கு நுகர்வோர் மூலமாகத்தான் தீர்வு காணலாமே தவிர சபையினால் சட்ட ரீதியாக எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்ற கருத்தை கூறினேன்.

மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபருக்கு பேசி அரசாங்கம் மூலம் ஒவ்வொரு பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும் ஒவ்வொரு கிழமைக்கு ஒரு தடவை கோட்டா அடிப்படையில் வழங்க வேண்டும் என்று, 500 சீமெந்து பக்கட் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கினால் அவர்கள் மூலம் ஒரு விலை நிர்ணயம் செய்யலாம் என்ற கருத்தை கூறினேன். இதற்கமைய நாம் இந்த முன்மொழிவை சபை தீர்மானமாக எடுத்து அரசாங்க அதிபருக்கு அனுப்புவதற்காக முன்மொழிகின்றேன்.

**தீர்மானம் - 04/48/09**

தற்போது எமதூரில் சீமெந்துக்கான விலை ஏற்றத்தினைக் கருத்திற் கொண்டு மாவட்ட செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்து, சம்மாந்துறைப் பற்று பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு ஒரு கிழமைக்கு ஒரு தடவை கோட்டா அடிப்படையில் சீமெந்து விற்பனைக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தைக்காப்பள்ளி தெற்கு வீதி ஏறத்தாள 06 வருடமாக நீடிக்கின்ற ஒரு விடயம். இதில் நமக்கு இருந்த சட்டச் சிக்கல் என்னவென்றால், ஒன்று நமக்கு Road Inventory இல்லை. இரண்டாவது அந்த ஒழுங்கை எல்லையை காட்டுகின்ற பழைய உறுதி. நான் தவிசாளராக முதல் வந்தவுடனே இப் பிரச்சினை வந்து தைக்காப்பள்ளி நிர்வாகம் தலையிட்டு எல்லாரும் சேர்ந்து இணக்க சபைக்கு சென்று அது வெற்றியளிக்கவில்லை. இதற்கு காரணம் முன்னாள் தவிசாளர் ஐ.எம்.இப்றாஹிம் அவர்களால் எழுதப்பட்ட உறுதி. அந்த உறுதியில் எல்லை காட்டப்படுவது தைக்காப்பள்ளி மையவாடி. ஏனைய எல்லா உறுதியிலும் இருப்பது ஒழுங்கை. தாய் உறுதியை பெறுவதற்கு காணி பதிவாளருக்கு எழுதிய போது அது சூறாவளியினால் அழிந்து விட்டதாக பதில் கிடைத்தது.

நமது 1970 ஆம் ஆண்டின் Town Assesement Map இல் அந்த ஒழுங்கை காட்டப்படுகின்றது. அதை வைத்து வாதாடுவதற்கு அந்த ஒழுங்கை உறுதியால் விடப்பட்டதா இல்லை பொதுப்பாதையா என்ற கேள்விக்கு பதில் இல்லை. அதனால் சட்ட நடவடிக்கை எடுக்க இயலாமல் போய்விட்டது. சென்ற 10ம் மாதம் அந்த வளவுக்கு நெசவால வீதி விலாசத்தில் ஒரு கட்டிட நிர்மான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் எனக்கு ஒரு மனவருத்தம் என்னவென்றால், அப்படி ஒரு பிரச்சினை இருக்கும் போது அவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்க வேண்டும். இது சுட்டிக்காட்டப்படவில்லை. இந்த ஒரு முறைப்பாடு வந்தவுடனே என்னுடைய கையொப்பத்தில் நான் கடிதம் அனுப்பி இருக்கின்றேன். கட்டுமான வேலையை நிறுத்தும் படி அறிவித்திருக்கின்றேன். இதை சட்டரீதியாக அனுகுவதற்காக நமக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் உறுதியில் குறிப்பிடப்படும் வரைபடத்தை உத்தியோகபூர்வமாக ஒரு அனுமதிப் பத்திரம் உள்ள நில அளவையாளர் மூலம் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு சபையின் அனுமதியை வேண்டுகின்றேன்.

**தீர்மானம் - 04/48/10**
தைக்கா தெற்கு வீதியின் வரைபடத்தை (PP Copy) ஒரு அனுமதிப் பத்திரம் உள்ள நில அளவையார் மூலம் பெற்று அப் பாதையை திறப்பதற்குரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது முன்னோர்கள் அலிவன்னியனாரின் காலத்தில் இருந்து நமது பாதைகள் விரிவாக இருக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார்கள். Boundary Road எப்படி அலிவன்னியார் வீதி என்று பெயர் எடுத்தது என்றால் அலிவன்னியனார் அதிகாரத்தில் இருக்கும் போது அவர் சென்று வேலிகளை அகற்றி விரிவாக்கினார். அன்றய பட்டின சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்தப் பாதையை அலிவன்னியனார் வீதி என பிரசுரிக்கப்பட்டது.

துரதிஸ்டவசமாக ஜே புளக் பக்கம் கன்காணிப்பு இல்லாமல் பாதைகள் எல்லாம் நெருக்கப்பட்டுள்ளது. விளினியடி பிரதேசத்தை அளவை செய்தால் 06 மீற்றர்தான் இருக்கின்றது. 09 மீற்றர் இருக்க வேண்டும். கட்டடம் கட்டப்படும் போது கிராம சேவகர்களும் பார்ப்பதில்லை, ஒருவரும் பார்ப்பதில்லை. வீதியில் மதிலை கட்டி வைத்தால் நாம் உடைக்க சென்றால் பிரச்சினை. இந்தப் பிரச்சினை எல்லா பிரதேசங்களிலும் வருகின்றது. வேலிகள் நகர்ந்து பாதைகள் ஒடுக்கப்படுகின்றது.

நமது குடியிருப்பு பகுதிகளில் பெரும்பாலான காணிகள் அரச காணிகள் என்பதனால் இதில் எந்தவொரு கட்டுமான வேலையும் செய்வதற்கு பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டும். இது உதாசீனப்படுத்தப்பட்டு ஒருவரும் பாராத நிலை உருவாகி இருக்கின்றது. இதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக நாம் அனுமதிப் பத்திரம் உள்ள காணிகளில் கட்டுமான வேலைகளை அந்தப் பிரிவில் உள்ள கிராம சேவகர் கண்காணிக்க வேண்டும் என்றும், இச் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் ஒரு பிரேரணையை நிறைவேற்றி பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதற்கு சமர்ப்பிக்கின்றேன்.

**தீர்மானம் - 04/48/11**

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளுக்குள் நடைபெறுகின்ற கட்டுமான வேலைகள் அனுமதி பெறப்பட்டதா? என்று கண்கானிக்கின்ற பொறுப்பை கிராம சேவகர்களுக்கு கொடுப்பதற்கும், அவர்கள் நேரடியாக தலையிட இயலாவிட்டால் பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் தொடர்பில் அறிவிக்க வேண்டும் என்றும் பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அரசாங்கத்தின் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்வாங்கப்படவில்லை என்ற ஆதங்கம் என் உட்பட எல்லோருக்கும் இருந்தது. பாராளுமன்றத்தில் கதைத்த மாதிரி ஏதோ ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 04 மில்லியன். அதை நாம் உறுப்பினருக்கு என்று எடுத்துவிட்டோம். இந்த ஆதங்கம் சில கௌரவ உறுப்பினர்கள் என்னிடம் சொன்னவுடன் நான் அமைச்சு வலைத்தளத்திற்கு சென்று அனைத்து சுற்றுநிரூபங்களையும் எடுத்தேன். அதில் ஒரு இடத்திலும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர மக்கள் பிரதிநிதித்துவப் பங்களிப்பை பற்றி கூறப்படவில்லை.

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் ஒரு கடிதத்தின் பிரதியை என்னிடம் அனுப்பி இருந்தார். பொத்துவிலில் பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வமாக ஒரு கௌரவ உறுப்பினருக்கு 04 மில்லியனுக்குரிய வேலைத்திட்டத்தினை உங்கள் மேற்பார்வையினால் செயற்டுத்துவதற்கு உங்களுக்கு அனுமதி வழங்குகின்றேன் என்று ஒரு கடிதம் அனுப்பி இருக்கின்றார். இது பாராளுமன்ற உறுப்பினர்களின் திணிப்பில்தான் நடக்கின்றதே தவிர பிரதேச செயலாளர்களுக்கு நம்மை உள்வாங்க வேண்டும் என்ற ஒரு அறிவுறுத்தல் இல்லை. கலந்துரையாடலுக்கு உள்வாங்கப்பட வேண்டும் என்று இருக்கின்றது. அதற்கு அப்பால் இல்லை. இது அவர்கள் அரசியலுக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக செயற்படுத்துகின்ற ஒரு திட்டம். சிலருக்கு நிகழ்வுகளுக்கு செல்வதற்கு அறிவித்தல்கள் வந்திருக்கலாம். ஆனால் தீர்மானங்கள் எடுப்பது சம்மந்தமாக இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமான தீர்வுகள் எடுக்கப்பட்டு கையொப்பம் கேட்டு வருகின்ற நேரம் ஒப்பம் இடலாமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கலந்துரையாடலில் நீங்கள் பங்காளியாக இருந்தால் இனங்காண்பதில் நீங்கள் ஒரு பங்காளி. ஆனால் செயற்படுத்துவதில் உங்களது பங்களிப்பு இல்லாவிட்டால் நீங்கள் பொறுப்பு எடுக்க இயலாது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அபிவிருத்தி என்று வரும் போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளக்குதான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஏனைய இடங்களில் முழுப் பணியும் அரசாங்கம் சார்ந்த அந்தந்த உறுப்பினர்கள் மூலமாகத்தான் நடைபெறுகின்றது. இந்த ஊரில் அரசாங்க கட்சியாக இல்லாவிட்டாலும் ஊரின் தவிசாளர் நீங்கள். நாங்கள் அங்கத்தவர்கள். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலமை பீடத்தில் இருக்கின்ற அந்த நடைமுறையை அப்பால் வைத்து இந்த சபையை பொருத்தவரையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்னொருவருக்குத்தான் உப தவிசாளர் பதவியை தெரிவு செய்வதற்கு கடிதம் அனுப்பினார்கள். ஆனால் என்னைப் பொருத்தவரையில் 12 மாற்றுக் கட்சி உறுப்பினர்கள்தான் உப தவிசாளராக என்னைத் தெரிவு செய்தார்கள். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற கதையை அன்றில் இருந்தே மறுத்து வருகின்றேன். காரணம் உங்களுக்குதான் நான் கட்டுப்பட வேண்டும்.

அந்தந்த வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்டு அங்கு ஒரு வேலை அந்த வட்டார பிரதிநிதியின் பங்களிப்பு இல்லாமல் செய்வது என்பது எதிர்கால அரசியலில் என்ன இருக்கின்றது. எங்களிடம் நிதி இல்லை. ஆனால் 96 ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கின்றோம். ஏனைய குறுகிய அபிவிருத்திகள் செய்கின்றோம். சுய விருப்பத்தில் செய்த ஒரு திட்டம் ஒரு இலட்சம்தான். அதனால் எத்தனையோ ஏச்சுப் பேச்சுக்களை கேட்டாலும் அது ஒன்றும்தான் செய்தது. இப்படியான அபிவிருத்திகளை நேரடியாக கண்காணிக்க அந்தப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சட்டத்தில் இல்லாவிட்டாலும் நேரடியாக மக்கள் வாக்குப் பெற்றவர்கள். உடனே பிழை நடந்தால் இது பிழை என்று சொல்வதை நாம் உருவாக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இந்த ஊரில் ஏனைய விடயங்களை நிர்ணயிக்க இயலாது. எங்களுக்கு என்ற சுய கௌரவமும், எங்களுக்கு என்று இந்த ஊரில் எத்தனையோ இலட்சம் மக்கள் இருந்தாலும் 20 பேர்தான் இந்த சபையில் இருக்கின்ற உறுப்பினர்கள். அதுவும் சட்டரீதியாக நியமனம் பெற்ற உறுப்பினர்கள். அந்த உறுப்பினர்களை உதாசீனம் செய்வது என்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்தவொரு அபிவிருத்தி நடந்தாலும் உறுப்பினர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். அவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை தீர்மானமாக எடுத்தாவது நாங்கள் சட்டத்தை இயற்ற வேண்டும்.

பிரதேச சபைக்கு சட்டங்கள் இயற்றக் கூடிய அதிகாரம் இருக்கின்றது. அந்த அனுமதியோடு இவர்களுக்கு விளங்கப்படுத்தி, எங்களுக்கு ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளது. நீடிக்கப்பட்ட காலத்தை சரியான முறையில் பாவிக்க வேண்டும். ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு வருடமாக பாவித்து இந்த சேவைகளை செய்ய வேண்டும். இந்த ஊரில் பாராளுமன்ற உறுப்பினரும் இல்லை. எந்தவொரு மாகாண சபை உறுப்பினர்களும் இல்லை. இன்றய நிலமையை பொருத்தவரையில் சகல கட்டுப்பாடுகளும் தவிசாளருக்கு கீழ்தான் இருக்கின்றது. தவிசாளரின் வேலைகளுக்கு மற்ற 19 உறுப்பினர்களும் பின் நிற்க வேண்டும். கட்சி என்கின்ற கதையே இல்லை. ஏன் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் ஆளும் கட்சியில் இருந்து உதவி செய்யவில்லையா? நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து உதவி செய்யவில்லையா? எந்த உறுப்பினர்கள் ஒத்துழைப்பு இல்லாமல் இருக்கின்றார்கள். எனவே ஒருமித்த கருத்தோடு எங்களது உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தைக்காப்பள்ளி தெற்கு வீதி சம்மந்தமாக காரியாலயத்தில் இருந்த File இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
File இனை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அது கழவாடப்பட்டுவிட்டது என்று எனக்கு விளங்குகின்றது. ஏற்கனவே திட்டமிட்ட செயலாகத்தான் நடக்கின்றது. 2016.05.18 ஆந் திகதி எமது பிரதேச சபையினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சம்மதக் கடிதம் கோரல் என்ற தலைப்பில்

ஏற்கனவே பாதைகள் சம்மந்தமாக மூடி வைக்கப்பட்ட பொதுப்பாதை திறத்தல் சம்மந்தமாகத்தான் எல்லோரையும் அழைத்திருக்கின்றீர்கள். அழைத்த கடிதத்தின் பிரகாரம் ஏ.ஜே.ஜெசீமா மற்றும் ஏ.எப்.சியானா என்பவர்கள் இதற்கு சம்மதம் தெரிவித்து அப் பாதையை திறந்திருக்கின்றார்கள். அதில் ஏ.எப்.பௌசியா என்பவர் அந்த சம்மதக் கடிதத்தை ஒப்படைக்கவில்லை. அத்துடன் மேலும் பள்ளிவாசல்களிடமும் அனுமதி கேட்டிருக்கின்றார்கள். கலந்துரையாடலின் போது பெறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மூடி வைத்திருக்கும் பொதுப்பாதையை திறப்பதற்கு தங்களின் உயர் சபையின் சம்மதக் கடிதமும் தேவைப்படுவதனால் அச் சம்மதக் கடிதத்தினை அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம் என்பதின் கீழ் அவர்கள் அந்த சம்மதக் கடிதத்தினை அனுப்பி வைக்குமாறு என்ற வேண்டுகோளுக்கிணங்க அந்த சம்மதக் கடிதத்தினை அனுப்பி இருக்கின்றார்கள்.

எல்லா மக்களும் ஒருமித்ததாக அந்த மதிலை உடைத்து தருவதாக தீர்மானம் எடுக்கப்பட்டால் நாங்களும் அதற்கு சம்மதம் என்று நம்பிக்கையாளர் சபையினால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பின்னர் சட்டத்தரணி முஹம்மட் பௌசான் என்பவர் கௌரவ ஆளுநருக்கும், முதலமைச்சர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஒரு கடிதம் அனுப்புகின்றார். அக் கடிதத்தில் 07 நிபந்தனைகள் கேட்கின்றார். முதலாவது நிபந்தனை இந்த வீதிக்குரிய பெயர் என்ன? அப் பெயர் வைப்பதற்கு சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பிரதேச சபை அல்லது கிராம சபை சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்லது கூட்டறிக்கையின் உங்களால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி. இதுவரைக்கும் எங்களது சபையோ எந்தப் பாதைக்கும் தீர்மானம் எடுத்து பாதைக்கு பெயர் வைக்கவில்லை. இந்த நுணுக்கங்களை இவர்கள் அறிந்து, அடுத்தது பெயர் வைப்பதற்கான வர்த்தமானி பிரசுரத்தின் பிரதி. இவை எல்லாவற்றையும் வைத்து வேண்டும் என்ற செயலாக நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தயாராக இருப்பதாக அச்சுறுத்தல்படுத்தி இருக்கின்றார்கள். நாம் ஒரு தீர்மானம் எடுப்பதாக இருந்தால் இதை சரியான முறையில் நானும் நில அளவை திணைக்களத்தில் கதைத்ததற்கு அமைவாக கௌரவ தவிசாளர் ஊடாக பிரதேச சபை ஊடாக இது சம்மந்தமான விபரங்களை கேட்டு கடிதம் அனுப்பினால் இப் பாதையை நில அளவை செய்து தருவதற்கு தயார் என்று சொல்லி இருக்கின்றார்கள். அதை தாமதம் இல்லாமல் செய்வதற்குரிய ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நாம் எதையும் அணுகும் போது சட்டரீதியாக செயற்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த கிழமைக்குள் நில அளவை திணைக்களத்திற்கு ஒரு வேண்டுகோள் அனுப்புவோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று எமது சபையிலே கைகாட்டி சிறுவர் பூங்காவினை அழகுபடுத்தல் புனர்நிர்மாண வேலைகளை எமது சபையினூடாக செய்வதற்காக சில முன்மொழிவுகளை முன்வைக்க நினைக்கின்றேன். ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பூங்காவிற்குள் மணல் இடுதல் இதுவரைக்கும் நடைபெறவில்லை. ஏற்கனவே அந்தப் பாதையில் உள்ள மின்விளக்குகளைப் பயன்படுத்திதான் பூங்காவினுள் வெளிச்சம் இருந்தது. தற்போது மரங்கள் வளர்ந்ததனால் பூங்காவிற்குள் மிகவும் இருள் சூழ்ந்த நிலையில் இருக்கின்றது. ஆகவே பூங்காவிற்குள் மின்விளக்குகள் போடுவதற்குரிய ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நேரம் பூங்காவின் குளக்கரையில் தென் மேற்கு பாதைகளில் தற்போது மக்கள் கூடுதலாக பிற்பகல் வேளைகளிலே மக்கள் பொழுதுபோக்கை கழிப்பதற்காக வருகின்றனர். அவர்கள் அமர்வதற்கான ஆசனங்கள் குறைவாக இருக்கின்றது. அப் பாதையில் உள்ள மரங்களின் கீழ் அந்த ஆசனங்களை அமைக்க வேண்டும்.

அடுத்ததாக அக் குளம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு எமது ஊரில் உள்ள கூடுதலான மக்கள் அவ் இடத்திற்கு வந்து சிறுவர்கள் விளையாடி பொழுது போக்கை கழிக்கின்ற சந்தர்ப்பம் இருக்கின்றது. ஏற்கனவே நீங்கள் கூறியவாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் Padel Board பல்வேறு வடிவங்களில் இருப்பதாக நான் அறிந்தேன். எனவே சபைக்கு ஒரு வருமானம் வரக்கூடிய அமைப்பில் துரிதமாக செய்ய வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

அத்தோடு கடந்த வாரம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அவர்களின் முயற்சியினால் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகார சபையில் இருந்து அதன் உத்தியோகத்தர்கள், செயலாளர்கள் வருகை தந்து எமது ஊரின் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய சில இடங்களை பார்வையிட்டு சென்றிருந்தார்கள். அதனை துரிதமாக மேற்கொள்வதற்கு அந்த இடத்தின் நில அளவை வரைபடத்தினை கேட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் கைகாட்டி குளத்தினுடைய வரைபடம், சென்னல் கிராம பொதுச் சந்தை வளாகத்தினுடைய வரைபடம், சென்னல் வாசிகசாலையினுடைய வரைபடம் இம் மூன்றினையும் அவர்கள் துரிதமாக கேட்டிருக்கின்றார்கள். எனவே இதனை பெறுவதற்கு சபையின் ஆலோசனையை கேட்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் எந்த அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பதாக இருந்தாலும் பிரதேச சபையின் பங்களிப்பு இல்லாமல் அவர்கள் தன்னிச்சையாக செய்ய வருவார்களானால் அவர்களுக்கு இந்த சபையின் ஒத்துழைப்பு இருக்காது. நாங்கள் ஒருவருக்கும் தடை இல்லை. ஆனால் சபையின் கௌரவம் பேணப்பட வேண்டும்.

இரண்டாவது கைகாட்டிக் குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரியது. அதற்குரிய மின்விளக்குகள், மணல் இடுகின்ற விடயம் நாம் கட்டாயமாக செய்ய வேண்டும். அங்கு கடமையாற்றுகின்ற காவலாளிக்கு நன்றி சொல்ல வேண்டும். முன்னுதாரணமாக அதனை பராமரித்து வருகின்றார். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆனால் அந்த பாதை ஓரம் இருப்பிடங்கள் அமைப்பதற்கும் நாம் நீர்ப்பாசன திணைக்களத்திடம் அனுமதி எடுக்க வேண்டும்.

சென்னல்கிராம சந்தையில் நாம் எது செய்வது என்றாலும் 20 வருடத்திற்கு பின்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற நிலையில்தான் செய்ய வேண்டும். நேற்று கூட UDA வந்திருந்தார்கள். பிரதேச சபையிடம் கேட்காமல் எதுவும் செய்ய இயலாது. நாம் இருந்து திட்டமிட வேண்டும். பொறுப்பு கூறவேண்டியவர்கள் நாம். இந்த சபையின் கௌரவத்தை பேணுவதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/48/12**
கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுசரணையோடு மணல் இடுவதற்கும், மின் இணைப்பு பெற்று மின்விளக்குகள் பொருத்துவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்னல் சாஹிரா பாடசாலை நூலகத்திற்கும், நமது நூலகத்திற்கும் இடையில் ஒரு துண்டு மதில் கட்டப்படவில்லை. அந்த மதிலை நாம் கட்டிக் கொடுத்தால் அதில் விரும்பிய அபிவிருத்திகளை செய்யலாம்.

**தீர்மானம் - 04/48/13**
நிதி நிலமை சீராகும் போது சென்னல் ஸாஹிரா வித்தியாலயத்திற்கும், நமது நூலகத்திற்கும் இடையில் உள்ள துண்டு மதிலை நிர்மானிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நல்ல ஒரு விடயம் இந்த சபையில் இவ்விடத்திலே நன்றி சொல்ல வேண்டும். அபிவிருத்தி சம்மந்தமாக மட்டுமல்ல இந்த ஊரில் என்ன விடயம் நடக்க வேண்டும் என்றாலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏனைய அனைவரும் சம்மாந்துறையில் இருக்கின்ற கௌரவ தவிசாளருடன் இந்த சபைக்கு பொறுப்பான செயலாளரையும் உள்வாங்கி அந்தந்த வட்டார உறுப்பினர்களையும் அழைத்துதான் எந்தவிதமான காரியம் செய்ய வேண்டும் என்றாலும் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நான் முக்கியமாக கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவதற்கு கட்சி சார்பாக எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை மறந்து இவர்கள் செயற்படும் வண்ணம் எங்களுக்கு மிகவும் மனவேதனை அளித்துக் கொண்டிருக்கின்றது. அந்த காரணத்தினால் நீங்கள் உள்வாங்கப்பட வேண்டும். சபை கலைக்கப்பட்டாலும் கலைக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்வாங்கப்படுவதோடு இச் சபையில் இருக்கின்ற செயலாளரும் உள்வாங்கப்பட வேண்டும் என்று நான் மிகவும் காரசாரமாக கூறி முடிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் சம்மாந்துறை பிரதேச சபையின் ஒரு உறுப்பினராக என்னால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு பிரதேச சபையின் அனுமதியின் ஊடாக வழங்கப்பட்ட பிரேரணையின் திட்டத்திற்கு அமைவாகத்தான் அவர்கள் இந்த இடங்களை பார்வையிட வந்தார்கள். அவர்கள் சபைக்கு முன்கூட்டி அறிவிக்காததை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் திட்டமிடல் குழுவினர்கள் துரதிஸ்டவசமாகத்தான் சம்மாந்துறைக்கு வந்தார்கள். அவர்களுடைய அன்றய வருகையிலே சம்மாந்துறைக்கு வருவதான திட்டமிடல் இருக்கவில்லை. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் வற்புறுத்தலின் கீழும், அவ்வாறு என்னுடைய வற்புறுத்தலின் கீழ்தான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களை எமது ஊருக்கு அழைத்து வந்தார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் எல்லோருக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து வந்து எல்லாம் செய்வதற்கு உரித்து இருக்கின்றது. அதில் ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் அந்த திட்டமிடல் என்பதில் சபையின் பொறுப்பு இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்தவிதமான திட்டமிடலும் அந்த அபிவிருத்தி சம்மந்தமாக எடுக்கப்படவில்லை. நான் மிகவும் தெளிவாக கூறுகின்றேன். இன்ஷா அல்லாஹ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நான் எழுத்து மூலம் அறிவிப்பேன். எந்தவிதமான அபிவிருத்தி சம்மந்தமாகவும் திட்டமிடப்படவில்லை. ஆனால் எந்த இடத்தில் அபிவிருத்தி செய்வது, அந்த இடம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அபிவிருத்தி செய்யக்கூடிய இடமா என்பதை மாத்திரம் தான் அவர்கள் பார்வையிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது சமூகத்தின் தலைவர் நகர திட்டமிடல் அமைச்சராக இருந்தார். இங்கு ஆளும் கட்சியில் பலம் வாய்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இருந்தார். அந்த நேரத்தில் இங்கு நகர அபிவிருத்தி செய்யவில்லை. தற்போது எங்கே இருந்து நகர அபிவிருத்தி செய்ய வருகின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இனங்காணப்பட்ட இடங்களில் அபிவிருத்தி சம்மந்தமாக இந்த சபையிலே கௌரவ தவிசாளர் உட்பட செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோசனையின் படி கலந்துரையாடலை மேற்கொண்டு இந்த இடங்களை எவ்வாறான அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற முடிவுகள் எட்டப்பட வேண்டும். அதே நேரம் அக் குழுவினர் அன்று வந்த நேரம் சொன்ன அறிவித்தலின் படி சென்னல்கிராம பொதுச் சந்தை வளாகத்திலே அவர்கள் Market

Complex Ground Floor இலும், அதற்கு மேல் கல்யாண மண்டபம் / கலாசார மண்டபமும், 03rd Floor இல் வாடகை எடுக்கக்கூடிய மாதிரி அலுவலகம்/வங்கி/வீடு அமைப்பில் செய்து வாடகை எடுக்கலாம். ஆனால் பிரதேச சபையின் இடத்தில் வாடகை எடுக்கக்கூடிய கட்டடம் அமைக்க இயலாது என்ற மாதிரி கருத்து இருந்தது. ஆகவே எமது சபைக்கு வரக்கூடிய எதிர்கால திட்டமிடலின் ஊடாக நாங்கள் அதற்கு 03வது, 04வது மாடிகளை கட்டக்கூடிய ஏற்பாடு இருந்தாலும் அதற்கு ஏற்ற வகையில் அவர்கள் அடித்தளம் இட்டுத் தருவதாகவும் உறுதி அளித்திருக்கின்றார்கள்.

ஆகவே இது சம்மந்தமான கலந்துரையாடலின் போது இவ்வாறு செய்யலாம் என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம். இப்போது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய இடங்கள் இருக்கின்றது என்பதை அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்காகத்தான் அதனுடைய வரைபத்தினை கேட்டிருக்கின்றார்கள். எனவே அதனை பெற்றுத்தருவதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் ஆவண செய்யுமாறு தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சந்தை வளாகத்திற்குள் நுழைவதாக இருந்தால் கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதியோடுதான் நுழைந்திருக்க வேண்டும். ஆகவே இந்த தீர்மானம் என்பது எல்லா உறுப்பினர்களின் தீர்மானத்தோடுதான் எடுக்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலையார் வீதியில் காபட் அடிக்கப்பட்டுள்ளது. அம்பாரை 4ம் வீதி சென்று மலையார் வீதி இணையும் இடத்தில் வாகனம் இறங்க இயலாது. அதை நமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கூறினேன். அவர்கள் அதை கேட்பதாக இல்லை. அதே மாதிரித்தான் கருத்திட்ட வீதி அல் அர்ஷத் வடக்கு வீதி காபட் அடிக்கப்பட்டுள்ளது. அதை பணித்து இட்டதனால் அதனால் வாகனம் ஏறி, இறங்க இயலாது. அந்த வேலையை துரிதமாக செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அதனை எழுத்தில் அறிவிப்போம் என்று கூறி சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை